# பிரிவு 2 பஞ்சபுராணம்

திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்கள் ஆகும். தமிழ்ச் சைவ மரபில் மிக முக்கியமான பக்திப்பாரம்பரியங்களில் ஒன்றாக பஞ்சபுராணம் பாடுவது விளங்குகிறது. “பஞ்ச” என்பது ஐந்து என்ற பொருளையும், “புராணம்” என்பது  இறைவனைப் புகழும் பாடல்களையும் சுட்டுகின்றன.எனவே, பஞ்சபுராணம் என்பது சைவ சமயத்தின் ஐந்து முக்கியமான திருமுறைப் பகுதிகளிலிருந்து ஆக்கப்பட்ட பக்திப் பாடல்களின் தொகுப்பாகும்.

இவை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு,பெரியபுராணம் என்ற ஒழுங்கில் பாடப்படும். இப்பாடல்கள் அனைத்தும் இறைவன் மீது அளவற்ற பக்தியையையும் ஆன்ம ஈடேற்றத்தையும் பற்றி எடுத்துரைக்கின்றன.

சைவ ஆலயங்களில்  விசேடகாலங்களிலும் ,வீட்டில் காலை, மாலை வழிபாடுகளிலும்,பாடசாலை விழாக்களிலும் பஞ்சபுராணம் பாடப்பட்டு வருகின்றது. பஞ்சபுராணத்தை ஒதிய பின் திருப்புகழும்,கடைசியாக வாழ்த்தும் பாடும் வழக்கமும் உள்ளது. இதனைப் பாடத்தொடங்குமுன் “திருச்சிற்றம்பலம் “என்று சொல்லித் தொடங்கிப் பின் இறுதியிலும் “திருச்சிற்றம்பலம் “என்று சொல்லி முடிப்பதே மரபாக கொள்ளப்படுகின்றது.

பஞ்சபுராணத்தை ஓதுவதால் அல்லது கேட்பதால் பக்தர்களின் மனதில் இறைபக்தி பெருகி,  மன அமைதி ஏற்படும்.பஞ்சபுராணத்தைப் பாடுவது என்பது ஒரு வழக்கம் மட்டுமல்ல, அது சிவபெருமானை நினைத்து வாழும் எம் ஆன்மீகப் பயணத்தின் ஒரு படிக்கல் என்பதை உணர்ந்து நாமெல்லோரும் அதனை ஓதி வழிபடுவோமாக!